10. 1975-76ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது கல்வி மானியத்தின மீது விவாதம் தொடரும். பேசுவதற்கு 16 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் 7 முதல் 8 நிமிடங்களுக்குள் பேசி முடித்தால்தான், 12½ மணிக்கு அமைச்சர் பேச்சைத் துவங்க வாய்ப்பாக இருக்கும். நேற்றுப் பேசிய ஜேம்ஸ் அவர்கள் இன்றைக்குத் தொடர்ந்து 10 நிமிடங்கள் பேசுவார்.

*திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நமது மாநிலத்தில் இலவசக் கல்வித் திட்டம் அமுலில் இருந்து கொண்டிருக்கிறது. இது சமதர்மக் கொள்கைக்கு அடிப்படையாக—சமதர்மக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிற எந்த அரசும் கைக்கொள்ளவேண்டிய திட்டம். ஆனால், இன்றையதினம் தமிழ் நாடு அரசு அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தோம். உண்மையிலே இது விரும்பத்தக்கதல்ல. ஏனென்றால், இலவசக் கல்வித் திட்டம் வந்ததன் அடிப்படையில்தான் இன்றைக்கு ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அக இருளை அகற்றி அறிவொளி வீசப்படுகிறது. இந்த இலவசக் கல்வித் திட்டத்தைக் கைவிட்டால் ஏழைகள் கல்வி அறிவு பெற வாய்ப்பில்லாமல் போய்விடும். இன்றைக்கு இலவசக் கல்வித் திட்டத்தைக் கைவிட சில ஆதாரங்களைச் சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரிகிறது.

உதாரணமாக, இப்பொழுது பப்ளிக் எக்சாமினேஷனில் தேர்வில் 50 சத விகிதம் தகுதியின் அடிப்படையில் இடம் தந்து, அதாவது மெரிட் அடிப்படையில் இடம் தந்து, அவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று முடிவு வருகிறது. அந்த முதல் தகுதியில்லாத மற்ற 50 சதவிகிதத்தினர், இரண்டாந்தரம், மூன்றும் தரமாக உள்ளவரிடமிருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். ஏற்கெனவே மெரிட்டில் சேர்க்கப்படுகின்ற மாணவர்களிடம் வசூலிக்காமலிருப்பதால் ஏற்படுகின்ற இழப்புகளை, கடைசித் தரப்பிலுள்ள மாணவர்களைச் சேர்ப்பதால், அவர்களிடம் வசூலிக்கின்ற கட்டணத்தின் மூலம் காம்பன்சேட் செய்யலாம் என்று கருதுவதாகத் தெரிகிறது.

இந்தக் கொள்கையைக் கைக்கொண்டால் வசதி உள்ளவர்கள்தான் பயனடைவார்கள். காரணம், இப்போதெல்லாம் பணக்காரர்கள் குழந்தைகள்தான் பஸ்ட்கிளாஸ் வாங்குகின்றனர். மூன்றும் கிளாஸ் வாங்குகிற மாணவர்கள் நன்மை பெற முடியாது. வசதியுள்ள மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கின்ற நிலைமைதான் ஏற்பட்டுவிடும். வசதியில்லாத மாணவர்களுக்கு இலவசக்கல்வி பெற வாய்ப்பு இல்லாத கிடைக்காத என்ற அபாயகரமான நிலைமையை இந்த அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு விரும்பினால், வசதி உள்ளவர்களிடமிருந்து பல்வேறு வரிகள்மூலம்

பணம் வசூல் செய்து, இலவசக் கல்வியை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், இலவசக் கல்வி அமுலுக்கு வந்தது. வேண்டுமென்றால் எங்கள் கொள்கையைத் தொடர்ந்து கைக் கொள்வதா என்று கருதாமல், எங்கள் கொள்கையைத் தொடர்ந்து கடைபிடிக்கப் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி கொண்டு வரவேண்டுமென்ற கொள்கையை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எடுக்கேஷனல் ரிஃபார்ம்ஸ் கமிட்டி என்று ஒரு கமிட்டி அமைத்திருப்பதாக அமைச்சரின் அறிக்கையில் தெரிவிக்கிறார்கள். அந்த கமிட்டிக்கு என்ன என்ன டெர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ் என்று கூறவில்லை. கல்விமுறையை 10—2—3 என்ற அடிப்படையில் 15 ஆண்டு கல்விக் காலம் என்று கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், எந்தக் கரணத்தாலும் இலவசக் கல்வியை மறுபரிசீலனை செய்ய அந்தக் கமிட்டிக்கு ரெஃபரன்ஸ் அனுப்பக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிகளை ஏ விங், பி விங், சி விங் என்று பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்காகப் பல்வேறு ஆணைகள் பிறப்பித்தாலும் இதுவரையில் அந்த ஆணைகள் செயல் படுத்தப்படவில்லை. போர்டு ஸ்கூல்களுக்கு விதிமுறைகள், எம்.இ.ஆர். விதிமுறைகள் பி.எஸ்.எஸ். விதிமுறைகள் இவ்வாறு பல்வேறு விதி முறைகளிருக்கின்றன. அவை சரியாகச் செயல்படவில்லை. இந்த விதி முறைகளில் ஆசிரியர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய விதிமுறைகளின்படி அவர்களுக்கு நன்மை கிடைக்கவில்லை. ஆனால், அவர்களுக்கு தீமை கொடுக்கக்கூடிய விதிமுறைகள் தான் பின்பற்றப்படுகின்றன. ஆகவே, மாநிலத்தில் வேலை செய்கின்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரே மாதிரி விதிமுறைகளைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தமிழைப் பாடமொழியாக இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். இன்றையதினம், பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.யூ.சி. மாணவர்களுக்குத் தமிழில் போதிக்கிறோம். அவர்கள் தேர்வு தமிழில் எழுதவில்லையென்றால், அவர்களுக்கு அளிக்கின்ற இந்த ஸ்டைஃபண்டை திரும்பப் பெற்றுக்கொள்ள ஆணை பிறப்பிக்கப்படுகிறது. ஆனால், சட்டக் கல்லூரியில் தமிழில் படிக்கின்ற மாணவர்கள் ஆங்கிலத்தில்தான் பரீட்சை எழுதவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்யப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, அவர்களுக்கும் தமிழில் பரீட்சை எழுத வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாகக் கல்லூரி. ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், யூ.ஜி.ஸி. ஸ்கேல்ஸ் ஆஃப் பே அமுல்படுத்தப்படவில்லை. அந்தத் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கல்லூரி ஆசிரியர்கள் அரசாங்கத்தை வற்புறுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இந்த நாட்டில் பல்வேறு மாநிலங்களில் யூ.ஜி.ஸி. ஸ்கேல்ஸ் ஆஃப் பே அமுல்படுத்தப்